# கலைஞரும் நானும்

## 105

“கோவையில் பத்து ரூபாய் வாடகை வீட்டில் வாழ்ந்த தலைவர் கலைஞர்தான், முதலமைச்சராக கோவையின் முகத்தையே மாற்றிக் காட்டியவர். செம்மொழி மாநாட்டின் வாயிலாக, பல கட்டமைப்புகளைக் கோவைக்குக் கொண்டு வந்தார்” என தனது நினைவுகளைப் பகிர்கிறார் புலவர் செந்தலை கவுதமன்.



# “அவரது வரலாற்றில் சொல்லப்படாதவை அதிகம்!”

**புலவர் செந்தலை ந.கவுதமன், சூலூர் பாவேந்தர் பேரவை**

தஞ்சை மாவட்டத்தில், திருக்காட்டுப் பள்ளிக்கு அருகே உள்ள கிராமம்தான் நான் பிறந்த செந்தலை. எங்கள் ஊரில் ஆரம்பப் பள்ளிக்கு அடுத்து, திருக்காட்டுப்பள்ளியில் சென்று படிக்கவேண்டும். அங்கு படிக்கச் சென்ற காலத்தில்தான் நான் கலைஞரை அறிந்தேன்.

திருக்காட்டுப்பள்ளியில் புதிய பேருந்து நிலையம் கட்டி இருந்தார்கள். ‘என்ன பெயர் வைக்கலாம்?’ எனப் பேரூராட்சியில் பேசி முடிவு செய்து, உள்ளூர் கோயிலின் பெயரான ‘அக்னீஸ்வரர் பேருந்து நிலையம்’ என அறிவிக்கத் தீர்மானித்திருந்தனர். ‘தேவாரப் பாடல் பெற்ற தலம்’ என்பதால், அந்த முடிவுக்கு வந்துள்ளனர்.

தி.மு.கழகம் ஆட்சி அமைத்திருந்த நேரம், அறிஞர் அண்ணாவின் அமைச்சரவையில் கலைஞர் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபோது, அவரை அழைத்துவந்து பேருந்து நிலையத்தைத் திறக்கத் தேதி வாங்கி இருந்தனர். கலைஞர் வருவதால், பேருந்து நிலையத்தின் பெயரில் அவசர அவசரமாக ‘அக்னீஸ்வரர்’ எனும் வடமொழிச் சொல்லை நீக்கிவிட்டு, **‘தீயாடியப்பர் பேருந்து நிலையம்’** என்ற பெயரைப் பொறித்திருந்தனர்.

அன்று எனக்கு பள்ளிவிடுமுறை என்பதால், திராவிடர் கழகத் தோழர் கோவிந்தராசன் என்பவரும் நானும் கலைஞரின் உரையைக் கேட்க கூட்டத்துக்குச் சென்றிருந்தோம். அப்போதுதான், முதன்முறையாக கலைஞரைக் கூட்டத்தில் பார்த்ததும், அவரது உரையைக் கேட்டதும். இன்றும் அந்த உரை, நினைவில் உள்ளது.

**‘தீயாடியப்பர்’** என்பது உணர்வூட்டும் பெயர். செந்தமிழைக் காக்க தீக்குளித்த சின்னச்சாமி முதலிய தீரர்களை நினைவூட்டும் பெயர். மொழிப்போர் வரலாற்று முத்திரைப் பெயரை பேருந்து நிலையத்துக்கு சூட்டியிருக்கும் பெருமையைப் பெற்றுள்ளது திருக்காட்டுப்பள்ளி” என அன்று அவர் ‘தீயாடியப்பர்’ என்கிற சொல்லுக்கு விளக்கம் அளித்தபோது, எழுந்த கரவொலி அடங்க வெகுநேரமானது.

பேருந்து நிலையத் திறப்பு விழாவை, கொள்கை விழாவாக மாற்றினார் கலைஞர். ஒரு சொல்லுக்குள் ஒரு கொள்கை வரலாற்றை நுழைத்த கலைஞரின் நுண்ணறிவு தந்த வியப்பு இன்னும் அகல மறுக்கிறது. அதன் பின்னர் எத்தனையோ முறை அவரின் சொற்பொழிவுகள் என்னை வியப்பில் ஆட்கொண்டுள்ளன.

### சூலூர் கூட்டங்கள்

அவரை நேரில் சந்திக்கும் வாய்ப்புகள் அமையவில்லை என்றாலும், அவரைச் சுற்றி பல நினைவுகள் எனக்கு உள்ளன. சூலூரில் ‘பாவேந்தர் பேரவை’ மூலம் வரலாற்று உரையாடல் நடத்துவது, இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. 2005-ஆம் ஆண்டு சூலூரில் கலைஞர் தலைமையில் பொதுக்கூட்டம். அந்தக் கூட்டத்தின்போது, கலைஞர் சூலூருக்கு எத்தனை முறை வந்துள்ளார் என ஒரு குறிப்பு எழுதிக் கேட்டிருந்தார் சட்டமன்ற உறுப்பினர் மறைந்த சூ.சு.பொன்முடி அவர்கள். பொதுக்கூட்டத்தின்போது அந்தக் குறிப்பு கலைஞரிடம் சேர்க்கப்பட்டதும், அன்று அவர் பேசியது எல்லாம் அந்தக் குறிப்பினை ஒட்டித்தான் இருந்தன. 1948-ஆம் ஆண்டு அவர் கோவை வந்த நினைவுக் குறிப்பினை அவ்வளவு நெகிழ்வுடன் பேசினார்.



1946-ஆம் ஆண்டு சூலூரில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியதையும் அந்தக் குறிப்பில் கொடுத்திருந்தோம். கலைஞர் நடத்தி வைத்த முதல் சுயமரியாதைத் திருமணம் சூ.சு.பொன்முடி அவர்களின் பெற்றோர் திருமணம் எனப் பல வரலாறுகளை அந்தச் செய்திக் குறிப்பில் தொட்டுக்காட்டி இருந்தோம். அதற்கு அடுத்த நாள் வந்த ‘முரசொலி’யில் ஒன்றரைப் பக்கம் சூலூர் பொதுக்கூட்டச் செய்திக்கு இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. பிறரை நினைவூட்டுவதும், வரலாற்றில் யாருக்கெல்லாம் பங்கு உண்டோ அவர்களுக்கு உரிய இடத்தை அளிப்பதிலும் கலைஞர் உயரிய இடத்தில் இருந்தார்.

### மாநாட்டு மலர்

அதுபோல, கலைஞரின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுப்பதற்கான வாய்ப்பு 2008-ஆம் ஆண்டில் எனக்கு அமைந்தது. அந்த ஆண்டு கோவையில் தி.மு.கழக மண்டல மாநாடு நடத்த ஏற்பாடுகள் நடைபெற்றன.

**‘வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்’ என அவர், தான் எழுத வந்த தொடக்கக் காலத்திலேயே பதிவு செய்தவர். தமிழ் நிலைக்கும் வரைக்கும் கலைஞரின் இருப்பும் நீடிக்கும்; நிலைக்கும்.**

அந்த மாநாட்டையொட்டி மலர் வெளியிடுவதற்காக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சூ.சு.பொன்முடி அவர்கள் அழைத்திருந்தார்.

முன்னாள் அமைச்சர் பொங்கலூர் பழனிசாமி அவர்களும், அண்ணன் கோவை மு.ராமநாதன் அவர்களும் என்னிடம் அந்த வேலையை ஒப்படைக்க விரும்பியதையும் பொன்முடி அவர்கள் குறிப்பிட்டார். நான் நேரில் சென்று பேசியபோது இருவரும், ‘வரலாறு தெரிந்த நீங்கள்தான் மலர் பொறுப்பை ஏற்க வேண்டும்’ என என்னிடம் கேட்டுக் கொண்டனர். அந்த ‘மாநாட்டு மலர்’ வெளியிடுவதும், மாநாட்டுச் சிறப்புரையும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்பதால், மலர் சிறப்பாக வெளிவருவதற்கு, நான் முழு ஈடுபாடு செலுத்தினேன்.

கோவையும் பெரியாரும், கோவையும் அண்ணாவும், கோவையும் கலைஞரும், கோவையும் தளபதியும் என மாநாட்டுக் கட்டுரைகள் எழுதத் திட்டமிட்டேன். அதற்காகத் தரவுகள் சேகரிக்கையில், கலைஞர் குறித்து புதிய புதிய தகவல்கள் கிடைத்தன.

1948-ஆம் ஆண்டு வாக்கில் கோவையில் கலைஞர் தங்கி இருந்த அண்ணாசாமி என்பவரது வீடு உள்ளிட்ட இடங்களைச் சென்று பார்த்தேன். அந்த வீட்டினர், கலைஞர் குறித்து, பல புதிய தகவல்களை அளித்தனர். கலைஞர் எழுதிய பல கடிதங்களைக் காட்டினர். அவற்றை மாநாட்டு மலர் கட்டுரைகளில் தொகுத்திருந்தேன்.

1986-ஆம் ஆண்டு, மதுரையில் நடைபெற்ற **‘ஈழத் தமிழர் விடுதலை’** மாநாட்டில் அவர் ஆற்றிய உரை இன்றும் நினைவில் நிற்கிறது. கலைஞரின் அன்றைய உரை, பேச்சுக் கலையின் இலக்கியம் என்று நான் பல மேடைகளில் குறிப்பிட்டு வருகிறேன்.

### எழுதப்படாதவை அதிகம்

கலைஞர் எழுதியதைவிட, பேசியதைவிட அவர் சொல்லாமல் விட்டுச் சென்ற செய்திகள் அதிகம். அந்தக் குறிப்புகளை எல்லாம், அவரிடம் கொண்டு சேர்ப்பதற்கு எனக்கு வாய்ப்புகள் அமையவில்லை. சில நேரங்களில், அந்தத் தகவல்களை எல்லாம் ‘பதிவு செய்யலாம்’ எனக் கழகத் தோழர்கள் நினைவூட்டுவர். ஆனால், கலைஞர் கவனத்துக்குச் செல்லாமல் அவற்றைப் பதிவு செய்யக்கூடாது என்பதில், தெளிவாக இருந்தேன். இன்றும் இருக்கிறேன்.

13 வயதிலேயே கலை உலகுக்கு, அரசியல் உலகுக்கு வந்தவர் கலைஞர். மொழிக்குள் எழுத்துக்குள், உரைக்குள் தமிழர்களின் உணர்ச்சியைக் கொட்டி வைத்தவர் கலைஞர். ‘வீழ்வது நாமாக இருப்பினும், வாழ்வது தமிழாக இருக்கட்டும்’ என அவர், தான் எழுத வந்த தொடக்கக் காலத்திலேயே பதிவு செய்தவர். தமிழ் நிலைக்கும் வரைக்கும் கலைஞரின் இருப்பும் நீடிக்கும்; நிலைக்கும்.

**தொகுப்பு :**
**நீரை மகேந்திரன்**

....பகிர்வார்கள்

## 3% உள் ஒதுக்கீட்டால் உருவான மாற்றம்!

அருந்ததியினர் சமுதாய மக்களின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கான ஊன்றுகோலாக, 2009-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அரசு, 3% உள்இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தியது. இதனால், கடந்த 15 ஆண்டுகளில் அச்சமூகம் கண்டிருக்கிற மிகப்பெரிய மாற்றத்தை, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் வாயிலாக வெளிப்படுத்தியிருக்கிறது ‘தி இந்து’ பத்திரிகை. இந்த உள்இடஒதுக்கீட்டுக்கு முன்புவரை ஆண்டுதோறும் சில நூறு மருத்துவர்களும், பொறியாளர்களும் அருந்ததியர் சமூகத்தில் இருந்து வருவதே அரிதாக இருந்தது. ஆனால், 2009-ஆம் ஆண்டில் உள் இடஒதுக்கீடு வழங்கப்பட்ட பிறகு, அந்த ஆண்டிலேயே 1,193 பேர் பொறியியல் படிப்புக்குச் சென்றனர்.

தற்போது அந்த எண்ணிக்கை கிட்டத்தட்ட 3 மடங்கு அதிகரித்திருக்கிறது. 2023-24 கல்வியாண்டில் அருந்ததியர் சமூகத்தில் இருந்து 3 ஆயிரத்து 944 பேர் பொறியியல் படிப்புக்குச் சென்றிருக்கின்றனர். 2021-22 கல்வி ஆண்டில் 2 ஆயிரத்து 743 பேர் பொறியியல் படிப்பில் இணைந்துள்ளனர். அதேபோல மருத்துவப் படிப்பிலும் அருந்ததியர் சமூகத்தின் பிரதிநிதித்துவம் கணிசமாக அதிகரித்திருக்கிறது. பட்டியல் சமூகத்தினருக்கு 2023-24 கல்வி ஆண்டில் எம்.பி.பி.எஸ். படிப்புக்கு 6 ஆயிரத்து 553 இடங்களும், பல் மருத்துவப் படிப்புக்கு ஆயிரத்து 737 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. அதில் அருந்ததியர்கள் உள் இடஒதுக்கீட்டின் காரணமாக எம்.பி.பி.எஸ். படிப்பில் 193 பேரும், பல் மருத்துவப் படிப்பில் 54 பேரும் இணைந்துள்ளனர்.

ஆனால், 2009-ஆம் ஆண்டுக்கு முன்பு அருந்ததியர் சமூகத்தில் இருந்து ஆண்டுக்கு 50 மருத்துவர்கள் உருவாவதே அரிது. கல்வியில், வேலைவாய்ப்பில், பொருளாதாரத்தில் எல்லோரும் சமவாய்ப்புப் பெற வேண்டும் என்பதுதான் திராவிட மாடலின் இலக்கணம். அந்த இலக்கணத்திற்கு ஆகச்சிறந்த சான்றாக அருந்ததியருக்கான உள் இடஒதுக்கீடு திகழ்கிறது என்பதை, இந்தத் தரவுகள் மெய்ப்பிக்கின்றன.

## :ப்ளாஷ்பேக்





ஜி.தினேஷ்

### வீட்டுக்கு அழைத்து வாழ்த்து!

எனது பிறந்த நாளின்போது, தலைவர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோரைச் சந்தித்து வாழ்த்துப் பெற வேண்டும் என்பது என் நீண்ட நாள் விருப்பம். 2006-ஆம் ஆண்டு பிறந்த நாளின்போது அண்ணா அறிவாலயம் சென்ற நேரத்தில், பேராசிரியர் அவர்கள் காரில் புறப்பட்டுக் கொண்டிருந்தார். “என்ன விஷயம்?”என்று கேட்டவரிடம், “என் பிறந்தநாளை முன்னிட்டு, உங்களிடம் வாழ்த்துப் பெற வந்தேன்” என்று கூறினேன். “வீட்டிற்கு வரவும்” என வரவழைத்து, எனக்குப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்ததும், பேராசிரியர் அவர்கள் சிறிது நேரம் என்னிடம் உரையாடியதும் மறக்கமுடியாத நினைவுகள்.

**– ஜி.தினேஷ், கிளைச் செயலாளர், புழல் ஒன்றியம், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### வெள்ளி முளைத்தது!

1949-ஆம் ஆண்டு செப்டம்பர் 17-ஆம் தேதி திராவிட முன்னேற்றக் கழகம் உருவான மறுநாள், என்.வி.நடராசன் தலைமையில் அமைப்புக்குழு கூடி, அண்ணாவைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தது. நிர்வாக வசதிகளுக்காக 133 பொதுக்குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். இப்பொதுக் குழுவில் இருந்து ‘அமைப்புக்குழு’, ‘பிரச்சாரக் குழு’, ‘அமைப்புத் திட்டக்குழு’, ‘நிதிக்குழு’ என நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டன. இதற்கு அடுத்த வாரம் வெளிவந்த ‘திராவிட நாடு’ ஏட்டில் ‘வெள்ளி முளைத்தது’ என தலையங்கம் தீட்டினார் அண்ணா.

# திராவிடத்தால் வாழ்கிறோம்

723

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131